## போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து மேலாண்மை செயற்திட்டம் - 2017

---

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து மேலாண்மை செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி 5788–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரிவு 11, பொது நிபந்தனைகள் பீ(3) மற்றும் 4.09(பீ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. சொத்து முகாமை மீதான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திறனை அதிகரித்தல் மற்றும் வெளியீடு மற்றும் செயல்திறன் சார்ந்த சாலை ஒப்பந்த முறைமையை பயன்படுத்தி வடிவமைத்தல் - நிர்மாணித்தல்- பராமரித்தல் முறையிலான ஒப்பந்தத்தின் முன்னோடி செயற்திட்டமாக பேலியகொடயில் இருந்து புத்தளம் வரையான வீதியில் தெரிவு செய்யப்பட்ட 58 கிலோமீற்றர்கள் ஜா-எல – சிலாபம் வரையான வீதி திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா. 18,125 மில்லியனிற்கு சமமான எஸ்.டி.ஆர் 90.5 மில்லியன் (ஐ.அ.டொலர் 125 மில்லியன்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 ஜூன் 30 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2026 ஜூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக்

கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆலோசனை சேவைகள், சமூக தாக்க மதிப்பீடு, மீள்குடியேற்ற செயற்பாட்டு திட்டம் தயாரித்தல், பயனாளர் திருப்தி மற்றும் காணி சுவீகரிப்பு ஆய்வு போன்றவற்றிற்காக மெற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூபா 140.21 மில்லியன் தொகையானது வீதித்துறை உதவிச் செயற்திட்டத்தினால் இச் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது இத்தொகையானது கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டத்தினால் ஏஆர்சீஜிஐஎஸ் எனப்படும் 2 மென்பொருள் பொதிகளை மேம்படுத்துவதற்காக 2017 பெப்ரவரி 28 ஆம் திகதி ரூபா 5.75 மில்லியன் செலவு செய்யப்பட்டு பராமரிப்பு நோக்கத்திற்காக கொள்வனவுத் திகதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டது, மேலும் குறித்த கிரயத் தொகை செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ளது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

பெறப்பட்ட தகவலின் பிரகாரம், கடன் உடன்படிக்கையின்படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஏற்பாடு ரூபா 18,125 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 125 மில்லியனாக காணப்பட்ட போதும் மீளாய்வாண்டில் கடன் செலுத்துதல் ஏதும் இடம்பெறவில்லை. இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பாக வரிசை அமைச்சின் கீழ் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 580 மில்லியன் ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் செயற்திட்ட செலவினங்களை முகங்கொடுப்பதற்கு ரூபா 63.79 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் மூலமாக ரூபா 5.75 மில்லியன் பெறுமதியான 2 கணனி மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்டு சொத்து மேலாண்மை மற்றும் வீதி பராமரிப்புக்கு உதவும் நோக்கத்திற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் 2017 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி

ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் பேயலியகொட - புத்தளம் வரையான வீதியினை மறுசீரமைப்பதற்கு ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய செற்திட்ட நடவடிக்கைகளான பயனாளர் திருப்தி ஆய்வு, பயிற்சிகள் மற்றும் ஆளுமை விருத்தி மற்றும் பேயலியகொட - புத்தளம் வரையான வீதியினை மறுசீரமைப்பதற்கு காணி சுவீகரிப்பு பணிகள் என்பன 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடன் உடன்படிக்கை பிரிவு அ அட்டவனை 02 இன் பிரகாரம் திட்ட ஊக்குவிப்பு குழு திட்டத்தின் செயற்பாடுகளுக்கு வழிகாட்டல் மற்றும் ஒட்டுமொத்த மேற்பார்வைக்கு பொறுப்பாகும் எனினும் 2017 திசம்பர் 31 வரையில் எந்தவொரு கூட்டமும் நடைபெற்றிருக்கவில்லை.

### 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

செயற்திட்டத்தினால் ஏஆர்சிஜிஐஎஸ் எனப்படும் 2 மென்பொருள் பொதிகளை கொள்வனவு செய்வதற்கு போட்டி அடிப்படையிலான விலைமனு கோரல் நடைமுறையினை பின்பற்றாமல் அங்கீகரிக்கப்பட்ட வினியோகஸ்தரிடம் இருந்து நேரடியாக மேற்கோளினைப்பெற்று ரூபா 5.75 மில்லியனுக்கு கொள்வனவு உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. மேலும் மூலதன பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கடன் ஒப்பந்தத்தின் கீழ் காணப்படும் ஒதுக்கீடுகளுக்கு பதிலாக செயற்திட்ட பராமரிப்பு செலவுகளுக்கான வரிசை அமைச்சின் கீழான ஒதுக்கீட்டில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 22 பதவி நிலைகள் அனுமதிக்கப்பட்டிருந்தும், செயற்திட்ட பொறியியலாளர், காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர், மீள்குடியேற்றல் அலுவலர், கொள்வனவு நிபுணத்துனர் மற்றும் சுற்றுச்சூழல் சமூகபாதுகாப்பு உத்தியோகத்தர் உள்ளடக்கிய முக்கிய பதவிகளிற்கான வெற்றிடம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிரப்பப்படாதிருந்தது.

### 3.5 காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றல் நடவடிக்கைகள்

நீர்கொழும்பு, வென்னப்புவ, மகாவெவ மற்றும் சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட 193 துண்டு நிலங்கள் சுவீகரிக்கப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்டிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.